www.tamilarangam.net

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## 177

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது

# புலி எதிர்ப்பும் நிதிப் பெருக்கும்

பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்பது கட்டுக்கதை என்று வரதராஜப் பெருமாள் தொடர்ந்து கூறிவந்தார்.

வீடியோவில் மாத்தையாவுடன் பிரபாகரன் கதைத்துக் கொண்டிருக்கும் காட்சியை கொண்ட வீடியோப் படத்தை புலிகள் காண்பித்து வந்தனர் என்று முன்னர் கூறியிருந்தேன் அல்லவா.

அந்த வீடியோப் படம் போலியானது. பிரபாகரன் போன்ற ஒருவரை வைத்து படம் எடுத்துள்ளனர் என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். உட்பட அவர்களது ஆதரவாளர்களும் கூறி வந்தனர்.

தமிழ் நாட்டிலும் புலிகளுக்கு எதிரான சக்திகள் அப்பிரசாரத்தை மேற்கொண்டன. அந்தப் பிரசாரம் முழுமையாக எடுபடாவிட்டாலும் ஓரளவு குழப்பத்தை ஏற்படுத்தி இருந்தது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைவரான மாத்தையாவின் பெயர் மட்டுமே அடிபட்டுக் கொண்டிருந்தது. கூட்டங்களிலும் மாத்தையாவே கலந்து கொண்டு உரையாற்றினார். பிரபாகரன் வெளியே மக்கள் முன் தோன்றவில்லை.

இவையெல்லாம் இலங்கையில்கூட தமிழ் மக்களிடம் சிறு சந்தேகங்களை தோற்றுவித்திருந்தன.

தமிழ் நாட்டில் திராவிடக்கழக முக்கியஸ்தர் டி.எஸ்.மணி. அவர் பிரபாகரனை சந்திக்க விரும்பினார்.

பிரபாகரனை நேரில் கண்டுவிட்டு சென்று தமிழக மக்களுக்கு உண்மை நிலையை எடுத்துச் சொல்வதே அவரது நோக்கம்.

டி.எஸ்.மணியை படகு மூலம் புலிகள் அழைத்து சென்றனர். வன்னிக் காட்டுக்குச் சென்று பிரபாகரனைச் சந்தித்தார் டி.எஸ்.மணி.

### மறக்கவில்லை

தமிழகம் திரும்பிய பின்னர் தன் அனுபவத்தை விபரித்தார்:

பிரபாகரன் சுறு சுறுப்பாக இருக்கிறார். மிகப் பாரிய முகாம் காட்டுக்குள் இயங்கி வருகிறது.

என்னுடன் அங்கு தற்போதுள்ள சூழ்நிலை பற்றி மனம் விட்டுப் பேசினார். இறுதியாக விடைபெறும்போது பிரபாகரன் கூறினார்: "தமிழ் ஈழம் பெறுவது குறித்து உறுதியாக இருப்பேன். பலம் பொருந்திய நிலையில்தான் சிறிலங்கா அரசுடன் பேச்சு நடத்தி வருகிறோம். முன்பு ஏமாற்றப்பட்டதை மறந்துவிட வில்லை."

டி.எஸ். மணி தமிழகம் திரும்பி தனது அனுபவங்களைக் கூறியதும், இன்னொரு திராவிடர் கழகப் பிரமுகரான ராமகிருஷ்ணன் என்பவருக்கும் பிரபாகரனை சந்திக்கும் எண்ணம் வந்துவிட்டது.

தமிழ் நாட்டில் புலிகளுக்காக நிதி திரட்டல் போன்றவற்றில் தீவிரமாக ஈடுபட்டவர் ராமகிருஷ்ணன். இவரது மேற்பார்வையின்கீழ் ஆயுத தயாரிப்பு பட்டறை ஒன்றும் கோயம்புத்தூரில் இயங்கியதாக தகவல் உண்டு.

ராமகிருஷ்ணனும் வன்னிக் காட்டில் பிரபாகரனை சந்தித்துவிட்டு தமிழகம் சென்று கதை கதையாகக் கூறினார்.

ராமகிருஷ்ணன் பதினாறு நாட்கள் இலங்கையில் தங்கியிருந்தார். அச் சமயத்தில் தமிழக அரசியல் தலைவரான பழ. நெடுமாறனும் வன்னியில்தான் இருந்தார்.

ராமகிருஷ்ணன் தன் அனுபவத்தைக் கூறுகிறார்: "பிரபாகரன் அதிகாலை 4.30 மணிக்கு எழுந்து விடுகிறார். புலிகளும் அப்படியே. காட்டுக்குள் இருக்கும் தனது அலுவலகத்திற்கு சென்று பத்திரிகைகள் படிக்கிறார். வானொலி கேட்கிறார்.

பல முனைகளில் இருந்துவரும் தகவல்களைக் கேட்டு கட்டளைகள் பிறப்பிக்கிறார். தளபதிகள் வருவதும், ஆலோசனைகள் பெறுவதும் சாதாரணமாக இருக்கிறது.

துப்பாக்கி சுடும் பயிற்சியை பார்வையிடுகிறார். விளக்கங்கள் கொடுக்கிறார்.

நான் அவருடன் இருந்தபோது கலைஞர் கருணாநிதியுடன் சென்னையில் நடந்த் பேச்சுவார்த்தைகள் பற்றிய விவரத்தை அவ்வப்போது அறிந்துகொண்டு பதில் அனுப்பினார்.

### வகுப்புக்கள்

முகாமில் தம்பி பிரபாகரனுக்கு இருந்த கலை ஆர்வத்தைப் பார்க்க முடிந்தது. தமிழ்நாட்டில் முதன் முதலாக சுதந்திரப் போராட்டம் நடத்திய புலித்தேவனைப் பற்றிய நாடகம் அங்கு நடத்தப் பட்டது.

இப்போது கலைஞரின் 'பாயும் புலி பண்டாரவன்னியன்' கதையை நாடகமாக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகளின் படையில் 11 வயதில் இருந்தே நிறைய உறுப்பினர்கள் சேர்ந்து வருவதால், அவர்களது கல்வி பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக முகாமில் பள்ளிக்கூடம் திறந்திருக் கிறார்கள்.

தமிழ், விஞ்ஞானம், புவியியல், கணிதம், ஆங்கிலம் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. வீடியோ, ஓடியோ கசட்டுக்கள் மூலமும் கல்வி கற்றுக் கொடுக்கப்படுகிறது.

மாலையில் இசை நிகழ்ச்சிகள் நடக்கின்றன. உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன், புரட்சிக்கவி பாரதிதாசன் எழுதிய பாடல்களை தேனிசை செல்லப்பா பாடியிருக்கிறார்.

இந்தப் பாசறை பாடங்களை, பாடல்களை புலிகள் விரும்பிக் கேட்கிறார்கள்.

புலிகள் ஆயுதங்களை கைவிடுவார்களா?


கலைஞர் கருணாநிதியுடன் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்-யோகி.

ஜனநாயகப் பாதைக்கு திரும்புவார்களா? என்று பிரபாகரனிடம் கேட்டேன்.

"கேள்வியே தவறானது" என்றார் பிரபாகரன். "ஜனநாயக உரிமைகளை ஆயுத பலத்தால் சாகடிக்கப் பார்த்தார்கள். ஜனநாயக உரிமைகளைக் காக்கவே நாங்கள் ஆயுதம் ஏந்தினோம்" என்றார் பிரபாகரன்.

"இப்போது சிறீலங்கா அரசுடன் பேச்சு நடத்துகிறீர்களே, முன்னர்போல ஏமாற்ற மாட்டீர்களா?" என்று கேட்டேன்.

"மக்களின் முழு ஆதரவு எங்களுக்கு இருக்கிறது. கடந்தகால பாடத்தை மறந்து சிறிலங்கா நடந்து கொள்ளுமானால் அதன் விளைவுகளுக்கும் அவர்களே

# ஓடும்போதும் சுருட்டல்

பொறுப்பேற்க வேண்டி இருக்கும்." என்று கூறினார் பிரபாகரன்.

### வல்வெட்டித்துறையில்

வல்வெட்டித்துறை சென்று பிரபாகரனின் வீட்டைப் பார்த்தேன். நாசமாகிக் கிடந்தது. கிட்டுவின் வீட்டுக்குச் சென்று அவரது அம்மாவைப் பார்த்தேன்.

அழுக்கான உடைகளுடன் வரும் பையன்களை உட்கார வைத்து, அவர்கள் உடைகளை வாங்கி அந்த அம்மா துவைத்துக் கொடுக்கிறார்.

"இந்தப் பாக்கியமாவது கிடைத்ததே!" என்று அவர் சொன்னபோது உண்மையிலேயே எனக்கு மெய்சிலிர்த்தது.

"கிட்டு கடிதம் எழுதினாரா அம்மா?" என்று நான் கேட்டதும், "என்றைக்கப்பா அவன் எழுதியிருக்கிறான். கேட்டால், 'நீ மட்டுமா எனக்கு அம்மா? எத்தனை பெடியன் களின் அம்மாக்கள் இருக்கிறார்கள்' என்று கூறுவான் எனச் சிரித்தார் கிட்டுவின் தாய்."

மேற்கண்டவாறு தன் அனுபவங்களை விபரித்திருந் தார் ராமகிருஷ்ணன்.



### சுருட்டிய பொறுப்பாளர்

விடுதலைப் புலிகளிடம் இருந்து தப்பியோடியபோது வாகனங்கள் மற்றும் பெறுமதியான உடமைகளையும் கைவிட்டே ஏனைய இயக்கங்கள் தப்பிச் சென்றன.

பொதுமக்களிடம் இருந்து அபகரிக்கப் பட்ட வாகனங்களை புலிகள் திருப்பி ஒப்படைத்தனர். ஏனையவற்றை தங்களுடன் வைத்துக் கொண்டனர்.

தப்பியோடும்போது இயக்கப் பொறுப்பாளர்கள் சிலர் நடந்து கொண்ட முறைகள் சுவாரசியமானவை.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். மட்டக்களப்பு பிரமுகர்களில் ஒருவராக இருந்தவரின் கையில் ஒரு இலட்சம் ரூபா இருந்தது. அவருடன் சேர்ந்து ஓடிக்கொண்டிருந்த உறுப்பினருக்கும் அது தெரியும்.

அந்தப் பணத்தை சுருட்டியாக வேண்டும். என்ன செய்யலாம்? என்று யோசித்தார் பொறுப்பாளர். ஓடிக்கொண்டிருக்கும் போதே பணக் கட்டை உள்ளாடைக்குள் மறைத்துவிட்டு, திடீரென்று "ஐயோ தோழர் பணத்தைக் காணவில்லை" என்று புலம்பத் தொடங்கிவிட்டார்.

கூட ஓடிச் சென்றவருக்கு அது பொய் என்பது தெரியும். ஆனால் நம்பியது போல நடித்தார். ஏன் தெரியுமா, அந்த உறுப்பினர் பொறுப்பாளருக்கு தெரியாமல் ஒரு ஐம்பதினாயிரம் ரூபாயை ஏற்கனவே உள்ளாடைக்குள் வைத்திருந்தார்.

இவ்வாறு ஒருவரை ஒருவர் ஏமாற்றுதல், வஞ்சித்தல், புறம்கூறுதல் போன்ற கேடு கெட்ட பழக்கங்கள் மேலோங்கியிருந்தன.

இயக்கத் தலைமைகள் இதனைக் கண்டு கொள்ளவில்லை.. ஏனெனில் அவையும் இயக்க உறுப்பினர்களுக்கு என்று இந்திய அரசிடம் பெற்ற பணத்தை தங்கள் பெயரில் சேமித்துக்கொண்டிருந்தன.

இந்தியப் படை காலத்தில் அதனுடன் இணைந்திருந்த இயக்கங்களுக்கு பெரும் தொகையான நிதி கிடைத்தது. கோடி கோடியாக கிடைத்தன.

உண்மையில் புலி எதிர்ப்பு என்ற நிலைப்பாடு புலிகளுக்கு எதிரான இயக்கத் தலைவர்களை தரையில் இருந்து ஆகாயத்திற்கு தூக்கியது. பெரும் செல்வந்தர்களாகினர்.

புலிகள் எங்களை தடுத்துவிட்டார்கள் எங்கள் தோழர்களை கொன்றுவிட்டார்கள் என்று இவர்கள் ஒப்பாரி வைத்தனரே தவிர புலிகளை எதிர்த்து உருப்படியாக எதனையும் செய்ததும் இல்லை. செய்த ஒரே ஒரு காரியம் புலி எதிர்ப்பு பேசிப்பேசி நிதி சேகரிப்பு நடத்தியதுதான்.

புலிகள் மட்டும் இந்திய அரசுடன் சமரசமாக சென்றிருப்பார்களேயானால், ஏனைய இயக்கத் தலைவர்களை இந்தியா திரும்பியும் பார்த்திருக்காது.

எனவே, புலிகளும் இந்தியாவும் சண்டையிட்டதால் உண்மையில் பயன் அடைந்தவர்கள் இயக்கத் தலைவர்கள்தான்.

இவ்வாறான பின்னணியில் இயக்கங்கள் சீர்குலைந்ததும், தவறான சக்திகள் இயக்கங்களுக்குள் தலைவர்களால் முன்னிறுத்தப் படுவதும் தவிர்க்க முடியாததாக இருந்தது.

போதிய நிதி கொடுத்தும், ஆயுதங்கள் கொடுத்தும்கூட தாங்கள் வெளியேற முன்னரே, விழுந்தடித்து தப்பியோடும் இயக்கங்களைக் கண்டு இந்தியப் படையினர் வெறுத்துப் போனார்கள்.

தங்கள் தலைவர்களதும், பொறுப்பாளர்களதும் புலி எதிர்ப்பு வீரம் எத்தகையது? என்பதை உறுப்பினர்கள் நேரில் கண்டபோது அவர்களுக்கு வாழ்க்கையே வெறுத்துப்போனது.

### தாக்குதல்

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தின் திருமலை மாவட்ட பொறுப்பாளர் ஜோச் தம்பிராஜா. இவர் சிலகாலம் நிக்கிரகுவாவில் இருந்து கல்வி கற்றவர்.

திருமலையில் மாகாணசபை செயலகம் இருந்தது. ஜோச் வைத்ததுதான் அங்கு சட்டம். வரதராஜப் பெருமாளுக்கும் ஜோச்மீது பிரியம்.

புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளிலும் ஜோச் முன்னின்றவர். சந்தர்ப்பம் கிடைத்தால் ஜோச்சை தீர்த்துக் கட்டுவது என்று புலிகள் காத்திருந்தனர்.

ஜோச்சை தீர்த்துக்கட்ட சில முயற்சிகள் செய்யப்பட்டபோதும் அவர் தப்பிக் கொண்டிருந்தார்.

11.01.1990 அன்று தனது பஜிரோ வாகனத்தில், மெய்க்காவலர்கள் சகிதம் நிலாவெளிக்கு புறப்பட்டார் ஜோச்.

திருமலையில் அவரது அலுவலகத்தில் இருந்து புறப்பட்டு நிலாவெளி நோக்கி சென்று கொண்டிருந்தார்.

நிலாவெளியில் ஆறாம் கட்டையில் ஒரு திருப்பம் ஒன்று வரும். அந்தத் திருப்பத்தில் மறைந்திருப்பவர்களை திருமலையில் இருந்து நிலாவெளி நோக்கிச் செல்பவர்கள் கண்டு கொள்ள முடியாது.

அத் திருப்பத்தில் ஆர்.பி.ஜி. மற்றும் வைத்துத்தான் புலிகள் பல தாக்குதல்களை நடத்தியும் இருந்தனர்.

அன்றும் அத் திருப்பத்தில் ஆயுதங்களுடன் புலிகள் காத்திருந்தனர்.

மாகாணசபை உறுப்பினர்களோ அல்லது முக்கியமானவர்களோதான் அப்போது பஜிரோக்களில் திரிவது வழக்கம்.

ஜோச்சினுடைய பஜிரோவும் புலிகளுக்கு நன்கு பரிச்சயமானது.

எனவே, திருப்பத்தில் பஜிரோவைக் கண்டதும் ஆர்.பி.ஜியால் தாக்கிச் சரமாரியாகச் சுடத் தொடங்கி விட்டனர். ஜோச்சை எதிர்பார்த்து இருந்து நடத்திய தாக்குதல் அல்ல அது.


ஆனாலும் புலிகள் தேடிய இலக்கு, எதிர்பாராமல் அவர்கள் வலையில் விழுந்தது.

எதிர்த்து சண்டையிடவே முடியாத நிலையில் ஜோச் மற்றும் அவரது மெய்க்காவலர்கள் உட்பட 6பேர் கொல்லப் பட்டனர்.

ஜோச்சுடன் இருந்த ஒருவர்தான் புலிளுக்கு தகவல் கொடுத்தார் என்றும் ஒரு கருத்து நிலவியது.

எனினும், தற்செயலாக ஜோச் மாட்டிக்கொண்டார் என்பதே பெரும்பாலும் உண்மையாக இருக்கவேண்டும்.

ஜோச் கொல்லப்பட்ட திருப்பத்தை ஜோச் வளைவு என்று பின்னர் ஈ.பி.ஆர்.



ஜோச் தாக்கப்பட்ட இடம் அம்புக்குறியால் காட்டப்பட்டுள்ளது.

வார்கள்.

அந்த வளைவில்தான் 1997ல் திருமலை எம்.பி. மகரூப் சென்ற வாகனமும் புலிகளால் தாக்கப்பட்டு மகரூப்பும் பலியானார்.

ஜோச் தம்பிராஜா கொல்லப்பட்ட பின்னர் திருமலையில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்க நடவடிக்கைகள் மந்த கதிக்கு உள்ளாகின.

வரதராஜப்பெருமாள் தனது வலது கரம் வீழ்ந்துவிட்டது என்று வருந்தினார்.

வடக்கு-கிழக்கு மாகாணசபையில் இரங்கல் கூட்டம் நடைபெற்றது. கிட்டத்தட்ட 20 நிமிட நேரம் அழுதபடியே உரையாற்றினார் பெருமாள்.

'திருமலையை சிங்கப்பூராக்க கனவு கண்டாயே, போய்விட்டாயே' என்று கூறித் தேம்பினார்.

(தொடர்ந்து வரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்